மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குளித்தலை

அசல் வழக்கு எண். 118/2014

வாதி/பிரதிவாதி தரப்பு சாட்சி திரு. ஆர்.ஞானசேகரன் பெஞ்ச் கிளார்க் அவர்களால் 44/1969 வது பிரிவின் கீழ் பிரமாணம் செய்யப்பட்டு 02.08.2022-ம் தேதியில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் : | சக்திவேல் | கிராமம் | |
| த/பெ. : | | தொழில் | |
| தாலுகா : | | மதம் | |
| ஜாதி : | | வயது | |

**வாசா.3. முதல்விசாரணை**

நான் தான்தோன்றிமலையில் உள்ள உதவி செயற்பொறியாளர் இயக்கலும் காத்தலும் மின்வாரியத்தில் வணிக ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். நீதிமன்ற அழைப்பபாணையின் பெயரில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். நான் 2009 முதல் 2014 வரை காணியாளம்பட்டியில் மின்வாரியத்தில் களஉதவியாளராக பணிபுரிந்தேன். 2013 ம் வருடம் வாதிகள் பிச்சைமுத்து மற்றும் சௌந்தர பாண்டியன் ஆகியோர் கிணற்றுக்கு மின்இணைப்பு வேண்டி கொடுத்த விண்ணப்பத்தின் பேரில கள ஆய்வு செய்தேன். நான் அங்கு பணிபுரியும் காலம் வரை அவர்களது கிணற்றுக்கு மின் இணைப்பு வழங்கப்படவில்லை. கள ஆய்வு சென்ற போது இளங்கோ, ராஜமாணிக்கம், சதாசிவம் ஆகியோர் எதிர்ப்பு தெரிவித்ததால் கள ஆய்வு செய்யாமல் திரும்பி விட்டோம்.

5 மற்றும் 6 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை -

வழக்கு கோப்பினை பார்த்து வழக்கு சம்மந்தமான விவரங்களை தெரிந்து கொண்டேன். சாட்சியம் அளிக்க வரும் போது நான் பணிபுரிந்த அலுவலகத்தில் உள் ள கோப்புகளை பார்க்கவில்லை. அலுவலக கோப்புகள் உதவி மின்பொறியாளர் வசம் இருக்கும். மேற்படி கோப்பிற்கும் எனக்கும் சம்மந்தமில்லை. வழக்கு விவரம் எனக்கு எதுவும தெரியாதுஎன்றும் வாதிக்கு ஆதரவாக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Taken down by me in open court read over interpreted in the witness and acknowledged by him /her to be correct.

P BALA MURUGAN Digitally signed by P BALA MURUGAN

District Munsif,

Kulithalai.